**சிந்திகல்லூரியின் தமிழ்த்துறை ஒருங்கிணைத்து நடத்திய**

# <u>பாரதியார் 143 ஆவது பிறந்தநாள் விழா</u>

**நிகழ்வறிக்கை**

**மகாகவி பாரதியாரின் 143 ஆவது பிறந்த நாளையொட்டி,** சிந்திக்கல்லூரியின் தமிழ்த்துறை ஒருங்கிணைக்கும் பாரதியார் பிறந்தநாள் விழா 11.12.2024, புதன் கிழமை அன்று முற்பகல் 10.30 மணி அளவில் கல்லூரியின் கருத்தரங்க அறையில் இனிதே தொடங்கியது.

இந்த நிகழ்ச்சிக்கு இளங்கலைத் தமிழ் மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி **இரா.தேவி** வரவேற்புரை ஆற்றினார்.



தொடர்ந்து, கல்லூரி முதல்வர், துணை முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர், சிறப்பு விருந்தினர் ஆகியோர், பாரதியாரின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.




**தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா** அவர்கள் நோக்கவுரை ஆற்றினார்.



கல்லூரியின் **துணை முதல்வர் முனைவர் ச.ஷோபனா** அவர்கள் முன்னிலை உரை




நிகழ்த்தினார்.

**கல்லூரி முதல்வர் முனைவர் த.பிரகலாதன்** அவர்கள் தலைமை உரை வழங்கி, பாரதியாரின் சாதனைகள் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் அமைந்துள்ள முறைகளை விளக்கினார்.



தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் ***முனைவர் அ. ஜெயபால்*** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.



நிகழ்விற்குக் சிறப்பு விருந்தினராக, திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் ***அ.ப.ராசா*** அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் தன் உரையில் பாரதியார் அன்று கனவு கண்ட கனவுகள் இன்று எந்த அளவுக்குச் சரியான வகையில் சாத்தியமாகியுள்ளன என்பதைச் சிறப்பாக எடுத்துக் காட்டிப் பேசினார்.

சிறப்பு விருந்தினரின் பாரதியார் பிறந்தநாள் விழா உரை மாணவர்களுக்கு, மகாகவி பாரதியார் பற்றிய அரிய பல செய்திகளை அறியத் தரும் வகையில் சிறப்பாக அமைந்திருந்தது.




நிகழ்வில் பல்வேறு துறை மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பாரதியாரின் பாடலைக் குழுப் பாடலாகவும் தனிப்பாடலாகவும் இசைத்தனர். பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, அவர் செய்த சாதனைகள் குறித்த உரைகளை மாணவர்கள் நிகழ்த்தினர்.



பாரதியாரைக் குறித்து சொல்கவிதை எனும் பாடலும் இசைக்கப்பட்டது. கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.




இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு மாணவி **வி.பிரியதர்ஷினி** நன்றியுரை கூறினார். நிகழ்ச்சியை இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவ **ரம்யா** தொகுத்து




வழங்கினார